# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 602/2022**

திருமதி.சுமதி (P.W. –1) **04.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னுடைய முதல் கணவர் பெயர் ஆறுமுக செட்டியார் என்றால் சரி. ஆறுமுகத்துடன் ஏற்பட்ட மன வாழ்க்கையின் மூலம் தேன்மொழி என்ற மகள் பிறந்தால் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனாருக்கு நானும் முதல் பிரதிவாதி வசந்தகுமார் வாரிசுதாரர்கள் என்றால் சரி. என்னுடைய மகளை முதல் பிரதிவாதிக்கு திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரி. முதல் கணவர் ஆறுமுகத்துடன் எத்தனை வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் ஆறு வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தேன். அதன் பிறகு கருத்துவேறுபாடு காரணமாக அவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரி. கருத்து வேறுபாட்டின் பிறகு எனக்கும் ஆறுமுகத்திற்கும் இடையே சட்டப்படி விவாகரத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. எழுதி வாங்கி உள்ளேன்.

2. விவாகரத்து ஏற்படாமல் நான் தற்சமயம் வேறு ஒருவருடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரி. அதனால் என்னுடைய தகப்பனாரின் சொத்துக்களில் நான் பாகம் கோர சட்டப்படி தடை ஏற்படுகிறது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து எழுதி வாங்கி முதல் கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் குடும்ப அட்டையில் ஆறுமுகத்துப் பெயருக்கு கீழ் சுமதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது அவருடைய இரண்டாவது மனைவியின் பெயர். அதற்கு கீழ் என்னுடைய மகள் தேன்மொழியின் பெயர்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. தேன்மொழி என்னுடைய மகள் என்றால் ஆமாம். ஆனால் நான் அவரையும் விட்டுவிட்டு தான் வந்துள்ளேன்.

3. என்னுடைய கணவரின் இன்னொரு மனைவி பெயர் சுமதி என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னுடைய குடும்ப அட்டை என்றால் தவறு. அதில் என்னுடைய மகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதால் என்னுடைய மகளின் குடும்ப அட்டை என்றால் தவறு. ராதாகிருஷ்ணனை எப்போது திருமணம் செய்து கொண்டேன் என்றால் 1992 இல் திருமணம் செய்து கொண்டேன். ராதாகிருஷ்ணனை திருமணம் செய்வதற்கு முன்பு சோமனூரில் வசித்து வந்தேன் என்றால் சரி. ஐந்து மாதம் வசித்து வந்தேன். அந்த சமயத்தில் தேன்மொழி என்னுடன் வசித்து வந்தார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கும் தேன்மொழிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. வருடம் தெரியுமா என்றால் பார்த்து தான் சொல்ல முடியும். முதல் பிரதிவாதியும் என்னுடைய மகள் தேன்மொழியும் அவர்களுக்கு முதல் குழந்தை பிறக்கும் வரை சுமூகமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரி. இரண்டாவது குழந்தை பிறக்கும் வரை சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.

4. முதல் பிரதிவாதிக்கும் என்னுடைய மகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு தாவா சொத்தை பொறுத்து ஆவணங்கள் தயார் செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து முதலில் என்னுடைய தாத்தா பரமானந்தத்துக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அந்த சொத்து பரமானந்தத்திற்கு சுயாஜிதமாக பாதிக்கப்பட்டது என்றால் ஆமாம். என்னுடைய தாத்தா அந்த சொத்தை என்னுடைய தகப்பனாருக்கு பதிவு ஏற்பட்ட உயில் மூலம் பாத்திய படுத்தி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். உயிலின் அடிப்படையில் அந்த சொத்தில் என்னுடைய தகப்பனார் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரி.

5. உயில் மூலம் தாவா சொத்து என்னுடைய தகப்பனாருக்கு பாத்திய படுத்தி வந்துள்ளதால் அந்த சொத்து என் தகப்பனாரின் சுயாஜித சொத்து என்றால் தவறு. வழக்கிற்காக பரம்பரை சொத்து என்று பொய்யாக கூறி வருகிறேன் என்றால் தவறு. முதல் பிரதிவாதிக்கும் என்னுடைய மகள் தேன்மொழிக்கும் மனவிரோதம் ஏற்பட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு என்னுடைய தகப்பனாரை நான், தேன்மொழி, ராதாகிருஷ்ணன் எல்லோரும் சேர்ந்து ஏமாற்றி செட்டில்மென்ட் ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் தவறு. ஜெயராமன் மனைவிக்கு சொத்துக்கள் பாத்தியபடுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

6. வா.சா.ஆ– 2 ஆவண விபரங்களை எனக்கு தெரியும் என்றால் ஆமாம்.வா.சா.ஆ–2 ஏற்பட்டபோது அதை சொத்தில் எனக்கு பங்கு உள்ளதால் அது ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரி. அந்த சொத்து என்னுடைய பேத்திக்கு எழுதி கொடுக்கப்பட்டதால் நான் ஆட்சேபனை செய்யவில்லை. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரி. முதல் கையொப்பம் என்னுடைய மகள் தேன்மொழி உடையது என்றால் ஆமாம். செட்டில்மெண்ட் சொத்தில் எனக்கு பாகம் இல்லை என்பதால்தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் தவறு. என் பேத்திக்கு சொத்துக்கள் கொடுக்கப்பட்டதால் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ–2 ஆவணம் ஏற்பட்ட போது தேன்மொழி நல்ல மனநிலையில் இருந்தார் சரி. வா.சா.ஆ–2 தேன்மொழியை இளவர்களுக்கு பாதுகாவலராக காண்பிக்காமல் பாட்டியை இளவரின் பாதுகாவலராக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அவர் பாட்டி என்பதால் என் அப்பா அப்படி காண்பித்துள்ளார். தேன்மொழியை பாதுகாவலராக வா.சா.ஆ–2 ஆவணத்தில் பாதுகாவலராக போடவேண்டும் என்று குறிப்பிடாததற்கு காரணம் உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ–2 ஆவணம் என்னுடைய தகப்பனார் ஜெயராமன் இசைவு இல்லாமல் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் தவறு. செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது முதல் பிரதிவாதி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 115/2020

தாக்கல் செய்து அதில் என்னுடைய பெற்றோர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி தான செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக ஏற்பட்டது என்று சொல்லி ரத்து செய்யப்பட்டது என்றால் தவறு ரத்து செய்யப்படவில்லை.

7. அசல் வழக்கு எண். 115/2020 வழக்கில் செட்டில்மென்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் தவறு. அம்மாதிரி ரத்து செய்யப்படவில்லை. அசல் வழக்கு எண். 115/2020 வழக்கு நடந்து விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதன் அடிப்படையில் தான் இந்த தாவாவின் மூலம் தாவா சொத்துக்களில் பாகம் கோருகிறேனா என்றால் தெரியாது. வா.சா.ஆ–2 ஆவணம் ரத்து செய்யப்பட்ட பிறகு ஜெயராமன் முதல் பிரதிவாதி பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரி. ஆனால் அது பொய்யான ஆவணம். அந்த ஆவணம் பொய்யான ஆவணம் என்பதை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அந்த ஆவணம் ஏற்பட்டு 20 நாட்கள் கழித்து தெரிந்து கொண்டேன். எந்த வருடம் மாதம் என்றால் ஆவணங்கள் பார்க்க வேண்டும்.

8. அவ்வாறு தெரிந்து கொண்ட தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய பிரச்சனைகளை முடித்துவிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 1400 சதுர அடிகள். அந்தச் சொத்தில் வீடு கட்டப்பட்டு தரைத்தளம் முதல் தளம் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய பெற்றோர் உயிருடன் இருந்த போதும் தரைத்தளத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரி. அந்த சமயத்தில் அந்த வீட்டிற்கு அருகே வாடகைக்கு வசித்து வந்து பிறகு முதல் தளத்திற்கு குடிபெயர்ந்தேன் என்றால் ஆமாம். செலவுகள் செய்து குடி பெயர்ந்தேன். செலவு செய்ததற்கு உரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இவ்வாறு பிரச்சனை வரும் என்று எதிர்பார்க்கவில்லை. தாவா தாக்கல்

செய்வதற்கு நான் தேன்மொழி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் அறிவுரைகளை வழக்கறிஞருக்கு சொன்னோம் என்றால் தவறு, நான் மட்டும் சொன்னேன்.

9. முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக ஏமாற்றி பெறப்பட்டது என்று என்னுடைய அப்பா ஜெயராமன் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு தாக்கல் செய்துள்ளார். எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பார்த்தால் நான் சொல்ல முடியும் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன். முதல் பிரதிவாரி மீது என்னுடைய தகப்பனார் வழக்கு தாக்கல் செய்த விவரங்கள் இந்த தாவாவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அம்மாதிரி சொல்லப்படவில்லை வழக்கிற்காக இப்போது புதிதாக சொல்கிறேன் என்றால் தவறு.

10. ஆட்சியரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று என்றால் ஞாபகம் இல்லை அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஆவணங்கள் வைத்துள்ளீர்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்கள் என்றால் சரி. முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் தவறாக மோசடியாக ஏற்பட்டிருந்தால் என்னுடைய தகப்பனார் ஆட்சேபனை செய்து நடவடிக்கை எடுத்து இருப்பார் என்றால் ஒரு வாய்தாவிற்கு அப்பா வந்திருந்தார். அதன் பிறகு இறந்து போனார். எந்த நீதிமன்றத்திற்கு வந்தார் என்றால் ஆவணங்களை பார்க்க வேண்டும். முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கு வந்து இன்று வரை நிலுவையில் உள்ளது அதை ரத்து செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்னுடைய அப்பாவிற்குத்தான் அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. அதற்குத்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. தாவாவில் என்னுடைய தாயார் பாப்பாத்தி இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரி. அவர் தற்போது உயிருடன் இல்லை. என்னுடைய தாயார் தாக்கல் செய்துள்ள பதில் உரை சங்கரிகளை தெரிந்து கொண்டேனா என்றால் படித்துப் பார்த்தேன் ஞாபகம் இல்லை. இரண்டாம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் அவருடைய கணவர் ஜெயராமன் தாவா சொத்துக்களை முதல்

பிரதிவாதிக்கு அவர் விருப்பப்பட்டு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்லி உள்ளார் என்றால் பொய். அதனால் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி மோசடியாக பெறப்பட்டதாக சொல்வதே தவறு என்றால் சரியல்ல.

12. முதல் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி முறையாக ஏற்பட்டு அமலுக்கு வந்துள்ளது என்றால் பொய். முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று பரிகாரம் போடவில்லை என்றால் சரி. எனக்குரிய பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பெற்றோரை கடைசி வரை முதல் பிரதிவாதி தான் பராமரித்து பார்த்து வந்தார் என்றால் பொய்.

மேலும் குறுக்கு விசாரணைக்காக தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.04 18:30:41 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.